உ

கற்பகவிநாயகர் துணை.

ஷண்முகநாதர் பதிகம்.

இஃது
மதுரைஜில்லா கண்டனூரைச்சேர்ந்த
பாலையூர் விநாயகர் கடாக்ஷ வித்துவான்
சீ. இராமசுவாமி ஐயங்காரவர்களால்
இயற்றப்பட்டு
கமலாபுரம் அஷ்டாவதானம் வித்துவான்
சீ. இராமசாமிபிள்ளை யவர்களால்
பார்வையிடப்பட்டு
கண்டனூர்
மு. கு. ரும. ருமசாமி செட்டியார்
விருப்பத்தின்படி
மதுரை வடக்குமாசிவீதி
வி. என். இராகவக்கோனார்
அவர்களால்

மதுரை:
ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.



உ

கற்பவிநாயகர் துணை.

சாற்றுக்கவிகள்.

மதுரைஜில்லா மழவராயனேந்தல் பஞ்சவிலக்ஷண
வித்துவான்
உ. சுந்தரமையரவர்க ளியற்றிய
வெண்பா.

தஞ்சமென வந்தவர்கள் தன்வினையை மாற்றியருள்
விஞ்சைமிகு மேவுகுகன் மீதிலே—அஞ்சலுடன்
மெய்ப்பதிகஞ் சொர்ப்பாலே விப்பிரன்சீ ராமையங்கார்
ஒப்புவரிப் பூவி லுளர்.

மதுரைஜில்லா குன்றுக்குடியென்று வழங்குகிற
மயூரகிரி வித்துவான்
அப்பாவுபிள்ளையவர்க ளியற்றிய
கட்டளைக்கலித்துறை.

பாட்டியலோடு வுரைப்பொருள் பெய்குபூ பார்ப்பவர்கட்
கேட்டகந்தோறு மணக்குங் குமரகுரு பரன்மேற்
நாட்டமுட னேதுதிப் பதமென்னும் நருங்கலவை
கூட்டி யணிந்தான் குணராமசாமி குறிசினன்றே.

பரங்கிப்பேட்டை அஷ்டாவதானம் மதுரகவி
வித்துவான்
அ. சிவசங்கரமூர்த்திபிள்ளையவர்களியற்றிய
வெண்பா.

பாலோ கற்கண்டோ பார்க்கடலி லுள்ளமுதோ
தாலம் புகழுஞ் சரவணன்மேற்—மேலாகத்
தானந் தவம்பொருந்துஞ் சற்குணன்சீ ராமனெனும்
ஆனந்தன் செய்த தமிழ்ப் பா.

தஞ்சாவூர்ஜில்லா கமலாபுரம் அஷ்டாவதானம் மகா-ா-ா-பு
சீ. இராமசுவாமிபிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மதிகளொரு சதகோடி யெனுமெழில் செய்யறுமுகமு
மையுலாவீ ராருவிழியும்
மலரெனுங் கடப்பமலர் மாலைதனையணிமார்பும்
மலையனைய பனிருகரமும்
துதிசெய்திடு மடியவர்க் கருள்புரியுங் கருணையும்
திருநீ றணிந்தமெய்யும்
தேவர்நறர் யாவரும் மேவரிய பாதமும்
தெய்வானை வள்ளியுடனே
நதிமதி தரித்து விடைதனிலேறு மரனீன்ற
நாதனயில் வேலவன்மேல்
நற்றமி ழுரைத்திட்ட வித்துவான் பாலையூர்
இராமசுவாமி யயங்கார் கவிகள்

பதியெனும் புவியெங்கு மதிமதுர மாகவே
பாலுடனே தேன்கலந்த
பாவனைகள் போலவே யாவரு மகிழ்ந்திட
பாடல்செய் ததுவு மமுதே.

ஷ வெண்பா.

மாமதுரக் கர்க்கண்டோ மாக்கடலின் றெள்ளமுதோ
நாமகளும் மெச்சும் நருந்தமிழோ—தேமேவும்
மாருப் பெருஞ்சுவையோ வாறுமுகர் மீதுரைத்த
சீராமன் செய் செந்தமிழ்.

ஷ கட்டளைக்கலித்துறை.

நாரணி வாலைதிரி சூலியீன்றிடும் ஞானகுரு
சூரசங்கார முருகனின்மேற் புகழ் தோத்திரப்பா
தாரணிந்தான் பாலையூர் வாழ்மறை ராமசுவாமிகவி
சீருரைந்த திருதேவாமுர்த மெனச் சொல்லுவரே.

மதுரைஜில்லா கண்டனூர் வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ
வீரப்பய்யா வவர்களியற்றிய
கலிவிருத்தம்.

சத்திவே லினைத்தாங்குங் காங்கே யன்மேற்
பத்தியாகப் பதிகம் புகன்றனன்
முத்தையீன்றிடுங் கன்னல்சூழ் பாலையூர்
வித்துவான் ராமசுவாமி விரிஞ்சனே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

சிவமயம்.

ஷண்முகநாதர் பதிகம்.

விநாயகர் துதிவெண்பா.

காருலவு மூலகில்வளர் கங்கையருள் வேலவன்மேற்
பார்புகழ வேபதிகம் பாடுதற்கு—வர்சடையிற்
கொன்றைதிங்கள் தும்பையணி குன்றவில்லி தந்தகரி
கன்றுகமழ் செங்கழல்கள் காப்பு.

ஆசிரிய விருத்தம்.

மணிதங்கு கோடிபூரணச் சந்தர வதனமு
மற்பொருமீ ராறுபுயமு
மலர்நீபமும் விழிக்கருணையு முருத் ராக்ஷ
மார்பும்வேற்கர வலிமையும்
பணிதங்கு வெண்ணீறு சடிலமொடு குழையுமே
பகைவெல் சேவற்று வஜமும்
பச்சைமயில் வாகன சொரூபப்ர காசமும்
பத்மபத மகிமையழகுர்
திணிதங்கு சேடனுற் சொல்லுதற் கரிதான
துய்யமலை களில் வாசனே

தேனுற்ற மொழிவள்ளி தெய்வானை கேள்வன்மேற்
செந்தமிழ் புனைதல் செய்யத்
துணிதங்கி யெனதுளம் பூரிக்க வுதவிசெய்
சூழுமைரா வதிநதித்
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
தூயஷண்முக நாதனே. (க)

ஆதிமறையுங் ககனமேவு மறசனு முனிவ
ரன்பொடு பணிந்துபோற்று
மலர்கஞ்ச மலர்பாத மிணை தஞ்ச மெனநம்பு
மடியனுக் கருள்புரியவா
பாதிமதி நதிபுனை சதாசிவற் குயர்விஞ்சை
பகருமெஞ்ஞான குருவே
பணியிலகு திண்டோள்கள் வலுமிகுத் தேயசுரர்
படியவயில் விட்டவரசே
நீதியுயர் வச்ரதரன் சிறைமீட்ட வண்ணலே
நிமலனே யமரர்கோனே
நேசமொடு மலைகளில் வாசமுற் றேபுகழ்
நிறைந்திடுங் கோலாகலா
சோதிமலி யுங்கடப் பந்தா ரணிந்தபுய
சுத்தசற் குணதீபமே
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
தூயஷண்முக நாதனே. (உ)

சித்திமிகு மத்துவித முத்தியெனும் வஸ்துவே
    சின்மையானந்த பொருளே
தேசிக மிலங்குமயில் வாகனமீ தேறிடுந்
    தேடுதற் கரியவருளே
அத்திமுக னுக்கிளைய சுத்தனே சத்திவே
    லணியுமீ ராறுபுயனே
அன்பருக் கருள்செய்ய மலைகள்தனில் வாசமா
    யானவாயினி யொன்றுகேள்
சத்தியமிஃ துணையன்றி யாதாரம் வேறிலை
    தள்ளுவது நீதியலவே
சகலமு முணர்ந்தருளும் வானறிவ னேயெனது
    தலைவலி யகற்றொணுதோ
துத்திய மெனப்பலர்க ணத்துமலர் பாதனே
    சொல்லுதற் கரியதேவே
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
    தூயஷண்முக நாதனே. (௯

அருணகிரி யார்தமக் கன்றுநல் லுபதேச
    மருள்கிரு பாசமுத்ரா
வறைதிரு முராஹரி கோவிந்தன் மருகவெம்
    வாலையாள்க் கினியசுதனே

விருதுபெறு சேனபதித் தலைவ வசுரர்தமை
வென்றநற் புருஷோத்தமா
விரிகஞ்ச மலரடிகள் வணிபவரை யடிமைகொளும்
வீரகெம் பீரசூரா
தருணமிது தண்டாயுதக் கரனே யென்மனது
தாளாது சற்றுகிலுஞ்
சந்ததமு மன்பர்தொழு மலைமீதி லினிதுவளர்
சாமியெனை யாள்வதரிதோ
சொருபமறி யாதுஷ்ட கயமுகன் றுருகனைச்
சூறையாடிய வேலனே
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
தூயஷண்முக நாதனே. (௪)

கந்தரம் மதிசூடி நந்தியெனும் விடையேறி
கங்கையொடு தும்பையறுகுங்
கமழ்கொன்றை யிறகுமான் மழுவெனும் பணிதங்கு
கயிலையம்பதி சேயனே
மந்திர சொரூப ஷோடசபூர்ணச் சந்திரமா
வதனமிலகும் வஜீரா
மலைமீ திருந்தரற்கேபிரண வந்தனை வழுத்து
மெஞ்ஞான குருவே

பந்திளங் கொங்கைகுற வள்ளிமண வாளநற்
 பன்னிரு திருக்கையனே
பைந்தமிழ் நிதஞ்சொலித் தொண்டர்கண் மிகப்பரவும்
 பகருமலைகளின் மீதுறையும்
சுந்தரமதான சேவற்றுவஜ னேயடிமைத்
 துன்பந் தவிர்த்துகந்தாள்
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
 தூயஷண்முக நாதனே. (௫)

சீர்பெறுஞ் செந்தூர் திருப்பரங் குன்றிலுந்
 திகழுந்தென் பழனியதிலுந்
திருவாவி நன்குடி சுவாமிமலை தன்னிலுந்
 திருத்தணிகை மாநகரிலுங்
கார்மேவு மெட்டிகுடி கதிர்காம மதனிலுங்
 கலைவளூர்தனி மலையிலுங்
கம்பைநக ரீட்டிக்கோ லாபசுமந் தானிலுங்
 கதிதருநன்மலை கண்முதலாய்
பாரதனி லெங்குநிறை கின்றவா நின்மகிமை
 பகரவெவரா லாகுமோ
பரமெனு மெஞ்ஞான குருவேயிவ் வேளையெனைப்
 பாதுகாத் தருள்புரிகுவாய்

தேவையுறு மமரர்முதல் யாவர்க்கு மீசனெனத்
 தோன்றிய வஜ்ஜிரசரீரா
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
 தூயஷண்முக நாதனே. (௬)

கொடியபிணிச காசவா தங் கபால நோய்
 குன்மமனை யாப்புசூலைக்
குஷ்டநீ ரிழிவுபல் தந்தவாய் வாணைபெருங்
 கூறுதுடை வாழைபடுவன்
மிடிமையுறு சொக்குச் சிரங்கு பக்கப்பிளவை
 விழிநோய் வலிப்புபித்தம்
மேகங் கிரந்தி லிங்கப்புத்து விப்புருதி
 வெடிபாண்டு மாசயித்தியம்
கடிய சோம்பல் பில்லிமந்திரஞ் சூனியங்
 கட்டுசெல்லிய மொடேவல்
காமநோய் தீவினைப் பலவுநின் பெயர்சொலக்
 கலங்குவது நிசமல்லவோ
துடியமுரா சொலியமலை தனிலமர்ந் தடிமையென
 துளமருவுந் தேவனேவா
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
 தூயஷண்முக நாதனே. (௭)

அரியவட கயிலைபதி நெடியமா லயன்விண்ணோ
 ரறியுதற் கரியபத்ம
வடிகளார் பசுபதி வுமாபதி• த்ரிநேத்ரபதி
 யாதியாம்பரஞ் சோதிமா
வுரிபோர்த்த வமலர்தன் தந்தைசொற் றட்டா
 துகந்துவொரு மாங்கனிக்கா
வுதயகிரி யஸ்தகிரி மேருகிரி யெனமறை
 வுரைக்குமெண் கிரிகளெல்லாம்
நெருநெரெனத் தவிடுபட வுரகர்கோன் சேடனுட
 னெளியவே வலம்வந்தவா
நித்தனே சுத்தனே யெத்தலமு மலைமீதி
 னின்றுவிளை யாடுமுருகா
துரியசுடரே யம்பசும் பொனே யடியன்முன்
 றுணைவருக விதுசமையமே
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
 தூயஷண்முக நாதனே. (அ

முத்துவை ரம்பச்சை புஷ்பரா கமுநீல
 முற்றுசெம்மணி களதனுன்
மொழிவதற் கரிதான நவரத்ன பீடமிசை
 மூதறிவினோர்கள் வாழ்த்த

எத்திசை மதிக்கின்ற மஞ்ஞைவா ஹனமதனி
லேந்திழைய ரிருவருடனே
யெக்காள மொடுசங்க மேளங்க ளார்ப்பவெளி
லியலமரரர்ச் சிக்கவே
பத்தர்க ணிதம்பரவ மலைகளி னடனமிடு
பரிபூர்ண கிருபாகரா
பழவினை யகற்றியுன் பங்கய மலர்ப்பதம்
பற்றுதற் கென்முன்வாவா
சுத்தமணி யாதிமணி தெய்வசிகா மணியான
சுப்ரமணி யற்புதமணி
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
தூயஷண்முக நாதனே. (க)

பொங்குதாம்பர வர்ணிநதி வளைந்தழகொழுகு
பொதிகைவாழ் குறுமுனிக்குப்
பூரண மதாகச் சடாக்ஷரத் துட்பொருளைப்
போதித்தே யருள் செய்தவா
பங்கயப் போதிலுறை வேதனைச் சிறையிட்டு
பண்டைமறை கற்பித்தவா
பாரிலுள் ளோர்க்குமின் னனுபூதி யல்லாது
பகரவே றேதுமுள தோ

கொங்கடரு மலர்களணி சுரிகுழன் மஹேஸ்பரி
குமரிசிங் காரிசூரி
கோதையர்க் கரசி த்ரிசூலியம் பிகையருள்
கோதிலாப் பூங்கடப்பர்
தொங்கலணி பன்னிரு புயத்தோய் துதித்தேன்
சுகந்தரவு மிதுசமையமே
துங்கமிகு செங்கமல மெங்குநிறை தேசிகா
தூயஷண்முக நாதனே. (ய)

கனகமணி மகுடவிக் நேஸ்வரரும் வாழிவெண்
கயிலைவள ரீசன்வாழி
கமழ்கொன்றை யுமைவாழி மால்வாழி திருவாழி
கமலயன் வாணிவாழி
தினகர னெனப்ரகா சிக்குமலை களிலுறு
தெண்டாயுதா நீவாழி
தெய்வ யானைவள்ளி யம்மைவாழி மயில்
சேவல்கதிர் வேலும்வாழி
வினவுமறை வாழிசிவ சமயமிக வாழியெம்
விண்ணவர்கண் முனிவர்வாழி
வீறுமறை யோர்வாழி ரவிவாழி மதிவாழி
மேதினி விசும்புவாழி

தனதக மகிழ்ந்தவடி யார்வாழி யிக்கவிதை
சாற்றுபவ ரெவரும்வாழி
சந்ததம் பக்தியுறும் பாலையூர் ராமஸ்வா
மித்தமிழும் வாழிவாழி. (௰௧)

ஷண்முகநாதர் பதிகம்
முற்றிற்று.

இப்படிக்கி
வி. என். ராகவக்கோன்
புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் இந்நூலாசிரியர் வித்வான் சி. இராமசுவாமி அய்யங்காரவர்களால் இயற்றப்பட்டு அச்சிட்டிருக்கின்ற புத்தகங்கள்.

கற்பகவிநாயகர் தோத்திரமாலை
கறுப்பண்ணசுவாமி பதிகம்
விகடானந்தரஞ்சிதமஞ்சரி
மாதர்கள்நீதிமார்க்கக் கும்மி
சண்முகநாதர் பதிகம்
திருக்குறிப்புத்தொண்டர் கும்மி
கௌரிஷேபிற் கும்மி
மார்க்கண்டேயர் கும்மி
கண்ணப்பநாயனூர் கும்மி
மதுரவீரசுவாமி ஆசிரியவிருத்தம்
சந்திரகாசன் கும்மி
வாலைமனோன்மணியம்மன் பதிகம்
மனோபதேசக் கும்மி

இவைகளடங்கியது

நல்லதங்காள் கும்மி
பர்மாடாப்பு நொண்டிச்சிந்து

இன்னுமனேகநூல்கள் இந்நூலாசிரியரால் கூடியசீக்கிரத்தில் வெளிவரும்.

இப்படிக்கு வி. என். இராகவக்கோன்,
புக்ஷாப் புதுமண்டபம்
மதுரை.